ஸ்ரீ ராமஜெயம்

**சுபகிருது வருஷ (2022 - 2023)**

**விசேஷ தினங்களும், தேவ, பித்ரு, பூஜா ஸங்கல்பங்களும்** அடங்கிய

# பஞ்சாங்கம்

# நித்யகாம்ய மஹாயக்ஞஸமிதி

**(REGD.)**


பிளாட் # 22, ஆழ்வார்திருநகர் அனெக்ஸ் 2வது மெயின் ரோடு,
ஆழ்வார்திருநகர், சென்னை – 600 087.
E-mail : ksmani1967@gmail.com
Website : **www.nkmysamithi.org**




**தொகுப்பாளர்**


**K.S. மணி சாஸ்திரிகள்** (சென்னை)
பஞ்சாங்கம் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு மட்டும்
இந்த கைபேசியில் தொடர்பு கொள்ளவும் +91 89390 38323

# நித்யகாம்ய மஹாயக்ஞஸமிதி

## ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் வேதபரிபாலன டிரஸ்ட் வேத பாடசாலை

ஆழ்வார் திருநகர், சென்னை–600 087.



## ரிக் வேத பாடசாலை

135, கீழ கிராமம், கடையநல்லூர், நெல்லை மாவட்டம்






## ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம சகஸ்ர கோடி பாராயணம் அழைப்பு

ஆன்மீக அன்பர்களே ! ஆசீர்வாதம்.

இப்பெழுது, உலகளவில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை தீர வேண்டும் என்று பிரார்த்தித்து **அகிலலோக ஸ்ரீ தசமஹாவித்யா பீடம்** சார்பில் லலிதா சகஸ்ரநாமம் பாராயணம் நடைபெறுகிறது. இதில் கலந்து கொண்டு தங்களது அனைத்து பிரச்சனைகள் தீரவும், நலமுடன் வாழவும் தங்களின் பங்களிப்பான ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் பாராயணம் தினசரி காலை மாலை செய்து 9962265105, 7299051505 என்ற இரண்டு எண்களில் வாட்சப் குருப்பில் தங்களது பாராயணத்தை பதிவு செய்து அனுப்பி வைக்க வேண்டும் என வேண்டுகிறோம்.

இப்படிக்கு
**அகிலலோக ஸ்ரீ தசமஹாவித்யா பீடம்,** 8/15, தாரகேஸ்வரி நகர் முதல் தெரு, செம்பாக்கம், சென்னை–73, கிழக்கு தாம்பரம், தமிழ்நாடு, இந்தியா.

## ஸ்ரீ காஞ்சி ஸ்ரீஸ்ரீ பரமாச்சார்ய மஹா ஸ்வாமிகள்



**வைதிக முறைகள் வளர உபகாரம்,** கல்யாணம் உபநயனம் முதலியவற்றில் குறைவில்லாமல் தக்ஷிணை தருவது மட்டுமின்றிப் பொதுவாகவே வைதிகர்களுக்கு உபகாரம் செய்கிற எண்ணம் வளர வேண்டும். இது இல்லாததால்தான் அடுத்த தலைமுறைக்கு வைதிக கார்யம் செய்து வைக்கவே ஆள் கிடைக்காத மாதிரிச் செய்திருக்கிறோம். வேத ஸம்பந்தமான கார்யங்கள் லோகத்தில் கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது இருந்து கொண்டிருக்கும்படி பண்ணுவதை விட ஜன ஸமூஹத்துக்குப் பெரிய பரோபகாரம் எதுவும் இல்லை. இப்போது விநோபா 'பூதான்' என்று சொல்வதற்கு முன்னோடி பழைய காலத்தில் ராஜாக்களும், பிரபுக்களும் வேத வித்துக்களுக்கு நிலம், மானியம் பண்ணினதுதான். பரம தரித்ரர்களும் சாஸ்தரப் பிரகாரம் சுபாசுபங்களைச் செய்ய நாம் உபகரிக்க வேண்டும். 'ஷோ' இல்லாமல் சாஸ்த்ரப்படி மட்டும் செய்வதற்கு நிறையச் செலவே இராது. என் பரோபகார லிஸ்ட் நீண்டுகொண்டே வருகிறது. அதிலே ஒவ்வொரு லொக்காலிட்டியிலும் பரம ஏழைகளும் சொற்ப வாடகையில் பெறுமாறு ஒரு கல்யாண மண்டபம், ஒரு அபரகாரிய ஸ்தலம் (உத்ரக்ரியைகள் செய்யுமிடம்) ஏற்படுத்துவதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

## ஸ்ரீஸ்ரீ காஞ்சி ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்



நம் பாரத நாட்டில் ஈஸ்வரன் இருக்கும் கயிலாயம் இருக்கிறது. பனிமூடிய உயர்ந்த இமயமலை இருக்கிறது. கங்கை, யமுனை, கோதாவரி காவிரி போன்ற பல புண்ணிய நதிகள் ஓடுகின்றன. ஸ்ரீராமன், கண்ணன், நாயன்மார்கள், தவத்தில் சிறந்த முனிவர்கள் அவதாரம் செய்த பூமி இந்த பாரத பூமி. பாரத பூமியில் தூய எண்ணமுடையவர் எண்ணியது எய்துவர் நினைத்ததை முடிப்பார்கள். மனிதனுக்கு வாழ்வில் இரண்டு கோட்பாடுகள் வேண்டும். ஒன்று மனத்தூய்மை, மற்றொன்று மன அமைதி. இந்த இரண்டும் பெற நல்ல எண்ணம் வேண்டும். மனிதன் நல்லவனாக வாழ வேண்டும் என்றுதான் சமயங்கள் தோன்றி இருக்கின்றன. சிலர் சமயத்தை வாழ வைக்கிறேன் என்கிறார்கள். சமயங்கள்தான் மனிதனை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது.

கடவுளை ஏன் கும்பிட வேண்டும் என்கிறார்கள். மனிதன் மனிதனை நம்பினால் துன்பத்தைத்தான் சுமக்க வேண்டும். இறைவனைத் தூய்மையான மனதோடு வணங்குங்கள். துன்பம் அகன்று இன்பம் பெறுவீர்கள்.

## ஸ்ரீ ஸ்ரீ காஞ்சி விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்



எளிய வாழ்க்கை நாம் எப்படி வாழ்கிறோமோ அப்படியே மற்றவர்களும் வாழ வேண்டும் என்று நினைப்பது உத்தமமான எண்ணம். ஆனால் எண்ணம் உத்தமமாயிருந்துவிட்டால் போதுமா? நாம் டாம்பீகமாக வாழ்க்கை நடத்திக்கொண்டு மற்றவர்களும் அப்படி இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் அது நடக்குமா? அப்படியே நடந்து அமெரிக்கா மாதிரி எல்லாரும் லக்ஷுரியஸாக வாழ முடிந்தாலும் அது நல்லதுதானா? லௌகிகமான ஸௌக்யங்கள் ஜாஸ்தியாக ஆக ஆத்மா அபிவிருத்திக்கே வழியில்லாமல் தானே ஆகியிருக்கிறது? எத்தனை போட்டாலும் திருப்தியில்லாமல் கபளீகரம் பண்ணுகிற நெருப்பு மாதிரித்தான் இந்த ஆசை என்பது அது எவ்வளவு ஸௌகர்யம் இருந்தாலும் த்ருப்திபடாமல் இன்னும் புதிசு புதிசாக ஸௌக்ய ஸாதனங்களைத் தேடிக் கொண்டுதான் இருக்கும். அத்ருப்தி குற்றங்கள் இத்யாதியைத்தான் அமெரிக்காவில் பார்க்கிறோம். ஸௌக்ய ஸாதனங்கள் என்று நினைக்கின்றவைகளை விட்டால்தான் சாந்தி கிடைக்கும் என்று அங்கே புத்திசாலிகளாக இருக்கப்பட்டவர்கள் புரிந்து கொண்டுதான் த்யானம், யோகம், பஜனை என்று கிளம்பியிருக்கிறார்கள்.

## ச்ருங்கேரி ஸ்ரீஸ்ரீஸ்ரீ பாரதி தீர்த்த மஹா ஸ்வாமிகள்



வேத உருவில் பகவான் நமக்கு தர்மத்தை அருளியுள்ளார். தர்மம் என்னவென்று நமக்குக் கூறியுள்ள அறிவுரைதான் வேதம். சிலர் 'கடவுள் நம்முன் தோன்றிகிறாரா? நம்முன் வந்து அவர் ஏதாவது கூறுகிறாரா என்ன? கடவுளின் அருளுக்கு என்ன அர்த்தம்? பொது ஜனங்களை ஏமாற்றுவதற்காகச் சிலர் கூறிய கூற்றாக இவை தென்படுகின்றன என்று வினவலாம். இந்த நவீன காலங்களிலே சில புத்திசாலிகள் இம்மாதிரியாகக் கூறலாம்.

கடவுளின் அருள் என்பது என்னவென்று நம் முன்னோர்கள் நமக்குத் தெளிவுபடக் கூறியுள்ளனர். நாம் முற்பிறவியில் செய்த கர்ம பலன்களை அனுபவித்தே தீர வேண்டும். அதற்குரிய பிரேரணைகளை (நல்லதோ – கெட்டதோ) நமக்கு பகவான் அளிக்கிறார்.

## ஸ்ரீஸ்ரீ அண்ணா (ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்)



மண் இல்லாமல் எப்படிக் குடம் உண்டாகாதோ; தங்கம் இல்லாமல் எப்படி பூஷணம் உண்டாகாதோ; அதுபோல் கடவுள் இல்லாமல் உலகம் உண்டாகாது. கடிகாரம் இயற்கையாகவே இயங்குவது போல் இருந்தாலும் அதை சாவி கொடுக்க எப்படி ஒருவன் வேண்டுமோ, அதுபோல் உலகம் இயற்கையாகவே நடப்பதுபோல் தோன்றினாலும் இதை இயக்குவிக்க ஒரு பகவான் இருக்கிறான். அவனன்றி எந்த இயக்கமுமில்லை. மண்ணிலிருந்து செடி, கொடி முளைப்பது இயற்கைபோல் தோன்றுகிறது. ஆயினும் இந்த மண்ணுக்குள்ளும் இறைவன் இருப்பதே அதற்குக் காரணம். உயிரில்லாத மாட்டினிடம் பால் ஊறுமா? உயிரில்லாத மரம் தளிர்விடுமா? அதுபோல் இறைவன் உள்ளே இராவிடில் உலகில் ஏதும் தானே உண்டாகாது.